REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 283

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.M.K.

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு :	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ 7—8—0

சென்னை : சித்திரை 29உ செவ்வாய் (11—5—54) ★ ★ ★ வெளியூர் : சித்திரை 30உ புதன் (12—5—54)

வியட்மின் தலைவர் விடுதலை முழக்கம்

இந்தோ-சீனாவை அடிமைச் சாவடியாக்க அமெரிக்கப் போர் வெறியர் சதி

ஆசியாவில் அமெரிக்க சூழ்ச்சி

இந்தோனேஷியா அதன் வலையில் விழாதிருக்க வேண்டும்

ஜகார்த்தா, மே 10—

உலகில் எப்பகுதியிலும் உள்ள விடுதலை விரும்பிகளின் நன்மதிப்பைப் பெற்றுள்ள, இந்தோ-சீன விடுதலைப்போர்த் தலைவன், ஹோ—சி—மின், அண்டாரா செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டியில், இந்தோ—சீன நிலைமையைத் தெளிவுபடுத்தி இருக்கிறார் :—

இந்தோ சீனாவில், சமாதானம் ஏற்பட ஒட்டாது தடுப்பது, அமெரிக்கப் போர் வெறியர்களே என்று அவர் குற்றம் சாட்டினார்.

இந்தோசீனா, கொரியா பிரச்னைகளுக்கு ஜெனிவா மாநாடு பரிகாரம் காண வேண்டுமென்று நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன். போர் நிறுத்த ஏற்பாட்டைச் செய்துகொண்டு, சமாதானம் ஏற்பட வழிகாண வேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோள். ஆனால், பிரெஞ்சு வல்லரசுக்கு ராணுவ உதவி அளித்து அமெரிக்கா, உசுப்பிவிடுகிறது.

இந்தோ—சீன போரில் தலையிட்டு இந்தோ சீனாவை அமெரிக்கப் பிடியின் கீழ் கொண்டுவந்து, ஒரு அடிமைச் சாவடியாக்க வேண்டும் என்பதுதான் அமெரிக்க சதியின் நோக்கம். தென் கிழக்கு ஆசியாவிலும், மேற்கு பசிபிக் வட்டாரத்திலும், அமெரிக்கா ஏற்படுத்திக் கொண்டுவரும் இராணுவ உடன்படிக்கைகள் யாவும், ஆசிய சமாதானத்தைக் குலைத்து, ஆசிய மக்களை அடிமைகளாக்குவதற்கேயாகும்.

இந்தோனேஷியா, அமெரிக்கப் போக்கை எதிர்த்து, ஆசிய நாடுகள் சமாதானத்துடன் வாழ வழிகாண வேண்டும் என்ற நோக்கத்துடன் பணிபுரிந்தால், இந்தோ சீனாவிலும் சமாதானம் மலரும்' என்று ஹோசின்மின் கூறினார்.

ஹோ-சின்-மின் மேற்கத்திய போர்த் தளபதிகள் கண்டு அஞ்சும் விதமான ஆற்றலுடன் போர் முறைகளை வகுத்து வெற்றிகண்டு வருகிறார். இவருடைய விடுதலைப் படையை ஒடுக்கிவிட்டால்தான், ஆசியாவில், தன் குரலுக்கு மதிப்பு ஏற்பட முடியும் என்று அமெரிக்கா எண்ணுகிறது.

ஹோ-சி-மின், கம்யூனிஸ்டு என்றுகூறி, கம்யூனிச எதிர்ப்பு அணியைத் திரட்டி, இந்தோ-சீனாவையும், பிறகு படிப்படியாக ஆசியா முழுவதையும் அடிமை கொள்ள அமெரிக்கா முயல்கிறது என்பதை, ஹோ-சின்-மின் விளக்கினார்.

தென்சிங் வாழ்க்கை வரலாறு

இதற்கும் ஒரு அமெரிக்கர்தானா

இமய உச்சிகண்ட வெற்றி வீரன் தென்சிங்கின் வாழ்க்கை வரலாற்றை எழுத, ஜேம்ஸ் உல்மான் என்ற அமெரிக்க ஆசிரியர் வந்திருக்கிறார். இவர் இங்கு 3 மாதம் தங்கி இருப்பாராம், இமயப் பகுதியையும் பார்ப்பாராம். இங்கிலீஷ் புத்தக வெளியீட்டாருக்காக இவர் இந்த புத்தகம் எழுதுகிறார்.

சிறைப்பட்ட எதிர்க் கட்சித் தலைவர்

உரிமைக்காக உண்ணாவிரதம்

ஐக்கிய மாகாணத்தில் ஜனநாயகம் படும்பாடு

கான்பூர், மே 10—

உத்திர பிரதேச சட்டசபையின் எதிர்க் கட்சித் தலைவர் தோழர் ராஜ்நாராயண், உ. பி. பிரஜா-சோஷலிஸ்டு கட்சியின் செயலாளர் அர்ஜுன் சிங் படோரியா, உத்திரப் பிரதேச இந்த் மஜ்தூர்சபாவின் செயலாளர் ஜி. டி. பாஜ்பையி, உ. பி. கிசான் பஞ்சாயத்துக் கட்சியின் செயலாளர் ஆர். எஸ். மிஸ்ரா ஆகியோர். மே 13-ந் தேதி முதல் சிறைக்குள் உண்ணாவிரதம் இருப்பதென முடிவு செய்துள்ளனர்.

அதிகாரிகள் தங்களிடம் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டுமென்ற தங்கள் கோரிக்கையினை வற்புறுத்தவே மேற்கண்ட நால்வரும் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளார்கள்.

உத்திர பிரதேச காங்கிரஸ் அரசாங்கத்தினரால் விசாரணைக்கைதிகளாய் சிறை வைக்கப்பட்டுள்ள அவர்கள், தாங்கள் கைது செய்யப்பட்டதன் காரணத்தை விசாரிக்க உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரைக் கொண்டு விசாரிக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்குக் கடிதம் ஒன்று எழுதியுள்ளனர்.

* * *

[சென்ற ஏப்ரல் மாதம் 25-ம் நாள் கான்பூர் ஜில்லா தொகுதி ஒன்றில் மக்கள் சபைக்கு நடைபெற்ற தேர்தலின் போது காங்கிரஸ்—பிரஜா சோசலிஸ்டு கட்சியினருக்கு இடையே சிறுகைகலப்பு ஏற்பட்டதை ஒட்டி விதிக்கப்பட்ட 144 தடை உத்திரவை மீறியதாகவும், சர்க்கார் ஊழியரை அவமதித்தல், அமைதியைக் குலைத்தல், தேர்தலில் ஒழுங்கீனமாக நடந்துகொண்டது என்ற குற்றங்கள் சாட்டப்பட்டு உ. பி. சட்டசபை எதிர்க் கட்சித் தலைவர் உட்பட 35 பேர்களை உ. பி. காங்கிரஸ் அரசாங்கம் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்]

நிலப் பிரபுக்கள் மீது — ஜெயபிரகாஷ் போர்க்கோலம்

'தவறாத' ஆயுதத்தைப் பிரயோகிப்பாராம்!

பேட்மா (இந்தூர்) மே 10—

"வினியோகம் செய்யப் போதுமான நிலத்தைப் பெறும் தனது லட்சியத்தை அடைய பூமிதான இயக்கம் தவறிவிட்டால், இந்த நல்லதொரு காரியத்துக்கு தங்கள் நிலத்தில் அவர்களுக்குண்டான பங்கைச் செலுத்த மனமில்லாமல் பிடிவாதமாய் இருக்கும் பணக்கார நிலச்சுவான்தாரர்களிடமிருந்து, கட்டாயமாக அவர்கள் பங்கைப் பெறுவதற்கு வகை செய்யக்கூடிய தவறாத ஆயுதத்தை கண்டுபிடித்தாக வேண்டிவரும்,"

—என்று, பிரஜா-சோஷலிஸ்டு தலைவரான தோழர் ஜெயப்பிரகாஷ் நாராயண் இங்கு பூமிதான முகாம் ஒன்றை ஆரம்பித்து வைக்கையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:- "சில மனிதர்கள் தங்கள் நிலங்கள் யாவற்றையும் தாங்களே வைத்துக் கொள்ள வேண்டுமென்று பிடிவாதமாக இருந்தால் இதை மக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஒன்று ஏற்படுமானால், தங்கள் பங்கை மறுக்கும் நிலச்சுவான்தாரர்கள் மீது தவறாதொரு ஆயுதம் உபயோகிக்கப்படும்."

"அம்மாதிரியான நிலப்பிரபுக்களின் நிலங்களில் வேலை செய்யும் கிசான்கள் மறுத்துவிடுவார்கள். இம்மாதிரி கிளர்ச்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டால், அது பயன்தரும் என்பதில் ஐயமில்லை."

1957-க்குள் 5 கோடி

முதல் ஆண்டில் ஒரு லட்சம் ஏக்கரும் இதுவரை 32 லட்சம் ஏக்கர் நிலமும் கிடைத்துள்ளது. 1957-க்குள் 5 கோடி ஏக்கர் நிலம் கிடைக்க வேண்டும். அதுதான் வினோபாபாவே அவர்களின் திட்டமாகும்.

இப்பணியின் அடுத்த முக்கிய கட்டமான நிலவினியோகம்தான் என்றும், இதுவரை உத்திரப் பிரதேசம், ஐதராபாத், மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய பகுதிகளில் சிறிதளவே நில வினியோகம் செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு, அமைச்சர்களும் தங்கள் வருவாயில் 6-ல் 1-பங்கை பூமிதான இயக்கத்திற்கு அளிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

சந்திரநாகூர்

மேற்கு வங்கத்துடன் இணைக்கப்படும்

புதுடில்லி, மே. 10—

முன்பு பிரெஞ்சு நாட்டவரின் ஆதிக்கத்தில் இருந்த சந்திரநாகூர் பிரதேசம் மேற்கு வங்கத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று டாக்டர் அமர்நாத் ஜாவைத் தலைவராகக் கொண்டு இந்திய அரசாங்கத்தினரால் அமைக்கப்பட்ட சந்திரநாகூர் விசாரணைக் குழு தனது அறிக்கையில் கூறியுள்ளது இம்முடிவை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டுவிட்டனர்.

அதன்படி சந்திரநாகூர் மேற்கு வங்கத்துடன் இணைக்கப்படும் .... ஹூக்ளி மாவட்டத்திலுள்ள அண்டைப் பகுதிகளுடன் இணைக்கப்பட்டு சந்திரநாகூரைத் தலைநகராகக் கொண்டு புதிய பிரிவொன்று அமைக்கப்படும். நீதிபதிகள் அமைப்பு, சட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள், மக்கள் சபையில் பிரதிநிதித்துவம் இவைகள் பற்றியும் சீக்கிரம் ஒரு முடிவு எடுக்கப்படும் என்று தெரிகிறது.

நேரு மாகாணத்தில் நாற்றமடிக்கிறது

பணம் தந்து பஞ்சைகளை கிறிஸ்தவராக்கினராம்!

கிறிஸ்தவர் - ஆரியசமாஜிகள் லடாய்!

மாதா கோயில்கள் தாக்கப்பட்டனவாம்!

லக்னோ, மே 10—

நேருவின் சொந்த மாகாணமான, ஐக்கிய மாகாணத்தில், மதவாதிகளால் ஏற்பட்ட தொல்லை, நாற்றமடிக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டிருக்கிறது.

பஞ்சைப் பராரிகளாக உள்ளவர்களுக்குப் பணம் கொடுத்து பாதிரிகள், கிறிஸ்தவர்களாக்கி விடுகிறார்கள் என்று பலமான புகார் கிளம்பி விட்டிருக்கிறது. இரண்டாண்டுக் காலத்தில் இவ்விதம் 250 பேர் கிறிஸ்தவர்களாக்கப்பட்டுவிட்டனர் என்று உள்நாட்டு மந்திரி டாக்டர் சம்பூர்ணானந்த் கூறினார்.

இதை எதிர்த்து, ஆரிய சமாஜின் ஒரு இயக்கம் நடத்தி, மதமாற்றத்தைத் தடுத்தும், மதம் மாறியவர்களை மீண்டும் இந்துக்களாக்கும் செயலில் ஈடுபட்டனர்.

மாதா கோயில்களில் நுழைந்து, சொத்துக்களை நாசமாக்கிய குற்றத்திற்காக சில ஆரிய சமாஜிகள் கைது செய்யப்பட்டிருப்பதாக, டாக்டர் சம்பூர்ணானந்தா கூறினார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 11—5—54 செவ்வாய்

வெற்றி — மக்களுக்கு!

வெற்றி! வெற்றி!! மக்களுக்கு மகத்தான வெற்றி! அறம் வென்றது ஆணவம் அழிந்தது! மக்கள் வென்றனர், மக்களை மதியா மமதை தோற்றது. எதேச்சாதிகாரப் போக்குக்கும், மக்களின் உரிமைக் கிளர்ச்சிக்கும் இடையே ஓராண்டுக் காலமாக நடைபெற்ற அறப்போர், மக்களுக்கு வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது. வாகை சூடும் மக்களைக் கண்டு, மக்களை மதியாதார் மூக்காடிட்டுக் கொள்ள வேண்டிய நிலை பிறந்துவிட்டது. பள்ளி செல்லும் குழந்தைகளின் வாழ்விலே பேரிடி எனப் புகுந்த, குலக் கல்வித் திட்டம் ஒழிந்தது, மக்களின் மனதில் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. பெற்றோர் பேரானந்தம் அடைவர்; ஆசிரியர் மகிழ்வர்; கல்வி நிபுணர்கள் களிப்படைவர்; மக்களாட்சியின் மாண்பினை மதித்திடுவோர் அனைவருக்குமே, மகிழ்ச்சிப் பெருக்குதான், சிறுவர்களைச் சீரழித்து, சமுதாயத்தை வர்ணாஸ்ரமத்தின் கோரப் பிடியிலே கொண்டு சேர்க்கும் கொடுமை நிறைந்த புதுக் கல்வித் திட்டம் ஒழிவதால்.

காமராஜர் மக்களுக்குத் தரும் முதற் பரிசு இது. பாராட்டுகிறோம். இந்தப் பண்பினைப் போற்றுகிறோம்.

ஆதிகாலத்து ஆணவ அரசர்களையும், ராணுவ வெறியர்களையும் மிஞ்சக்கூடிய முறையிலே ஆச்சாரியார் நடந்து கொண்டார்—மகான்கள் அவ்விதம்தான் நடப்பர் என்று சித்தாந்தமும் பேசினார்—காங்கிரஸ் தலைவர்கள் பலருடைய கருத்தையும் காதில் போட்டுக்கொள்ள மறுத்தார், காட்டிலிருந்து கடும்பசியுடன் ஓடிவரும் வேங்கை, எதிர்ப்பட்டோரை எல்லாம் தாக்கிக் கொன்று இரத்தம் குடித்து, பித்துத் தின்பதுபோல, புதுக் கல்வித் திட்டத்தை எதிர்த்தோரை எல்லாம் கொடுமை பலவற்றுக்கு ஆளாக்கினார்—சிறையில் தள்ளினார். ஓராண்டுக் காலமாக, அவர் பதவி வெறி பிடித்தலைந்து நாட்டவருக்குப் பொதுவாக, நம்மவருக்குக் குறிப்பாகத் தந்த தொல்லையை எண்ணினாலும் நெஞ்சு நோகும். மகிழ்ச்சிப் பெருக்கெடுக்கும் இந்த வேளையில், அந்தப் பழைய வேதனையைக் கிளறிக் கொண்டிருக்க வேண்டாமென்று விடுகிறோம்.

எவர் எதிர்த்தாலும், யார் தடுத்தாலும் என்ன நேரிட்டாலும் எவ்வளவு காரணம் காட்டப்பட்டாலும், நான் புதுக் கல்வித் திட்டத்தைக் கைவிடமாட்டேன் என்று கொக்கரித்தார்.

என் கல்லறைமீது வேண்டுமானாலும் காரித்துப்பட்டும், பிறகு—இப்போது நான் புகுத்தியதை திருப்பி எடுக்க மாட்டேன் என்று வீறுப்பாகப் பேசினார்,

கழகத்தாரின் எதிர்ப்பு என்னை என்ன செய்யும்—எனக்கு ஆண்டவனுடைய அருள் கிடைத்திருக்கிறது என்று 'அவதார புருஷர்' பாணியில் பேசினார்.

சட்டசபை உறுப்பினர்களின் நல்லுரையை வெட்டிப் பேச்சு என்று கூறினார்.

தகுதிமிக்க தலைவர்களின் பேச்சை, துச்சமென்று மதித்தார்—துரைமகனார்களை மிஞ்சும் போக்கிலே நடந்துகொண்டார்.

கணக்கைத் தீர்த்துக் கட்டி விடுவேன், "கபர்தார்" என்று காட்டுக் கூச்சலிட்டார்.

ஆனால் ஒவ்வோர் நாளும் 'புது கல்வித் திட்டம் ஒழிக' என்ற முழக்கமிட்டுக்கொண்டு தியாகராய நகரில், அவர் இல்லத்தின் முன் நின்று மறியல் செய்த, அறப்போர் வீரர்கள், தி. மு. கழகத் தோழர்கள், அணிவகுத்துச் சென்றபோதெல்லாம், போலீசாரின் தடி அவர்களின் மண்டையைத் தாக்கிக் குருதி கொட்டியபோதும், மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலே, அவர்களுக்கு தண்டனை தரப்பட்டபோதும், சிறையிலே கஞ்சிக் கலயம் தாங்கி அவர்கள் கஷ்டம் அனுபவித்தபோதும்—அறம் வெல்லும், ஆணவம் அழியும்—மக்கள் வெல்வர், மமதை மடிந்து படும்—புது கல்வித் திட்டம் ஒழிந்தே தீரும், என்ற நம்பிக்கைதான் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்து இருந்தது. சொல்லொணாக் கஷ்ட நஷ்டம் ஏற்றகாலை, அறப்போர் வெற்றிதரும் என்ற உறுதிதான் உறுதுணையாக இருந்தது. அவர்களுக்கெல்லாம் நமது வாழ்த்தும், வணக்கமும் வழங்கி மகிழ்கிறோம், அறப்போர் வீரர்காள்! வெற்றி! வெற்றி! எந்த, வர்ணாஸ்ரமக் கல்வித் திட்டத்தை ஒழித்தாக வேண்டுமென்று நீவிர், வீரப் பணியாற்றி, தியாகத் தழும்பு பெற்றீரோ, அந்த உதவாக்கரைத் திட்டம், எழுவர் கமிட்டியால் ஒழிக்கப்பட்டு விட்டது. சிறுவர்களின் கண்ணை அவித்துக் கைகாலை ஒடிக்கும் ஆச்சாரியார் கல்வித் திட்டம் ஒழிந்தது. ஜூன் முதல் மீண்டும் பழைய முறையிலேயே, கல்வி இருக்கும். களிப்பூட்டும் செய்தி! தியாகத் தழும்புகளைத் தடவிய வண்ணம், இந்தத் தேனைச் சுவையுங்கள், தென்றல் வீசுகிறது. தோழர்காள்!! வெற்றி உலா நடத்தி, விரப்பண் இசைத்து, மகிழ்ந்திடவாரீர்.

பிணத்திற்கு மணமேடை!

கல்கத்தா, மே 10—

மேற்கு வங்க அரசு, மேற்கு வங்கத்தில் புதியதொரு வடமொழிக் கல்லூரி நிறுவுவதற்கான திட்டமொன்றை அங்கீகரித்துள்ளதாகத் தெரிகிறது

நாட்டின் நாயகர்கள் [1]

[சி. என். அண்ணாதுரை]

பறட்டைத் தலையும், சொறி சிரங்கு பிடித்த உடலும்; கண்களிலே அழுக்கேறியுங் கிடந்தாள் இந்தக் குட்டி! எருமைக் கன்று தான் விளையாட!! களத்து மேட்டிலே நான் முதன் முதல் கண்டபோது கன்றுவியாய் இருந்தது. அப்படிப்பட்டவள், இந்த மேய்ப்பும் தேய்ப்பும் கிடைத்ததால், மேனியிலே மெருகு ஏறி, கண்களிலே ஒளியும் நடையிலே புது ஒயிலும் உடையிலே தனி ஆடம்பரமும் பெற்று, மினுக்கிக்கொண்டு திரிகிறாள். இவளை அன்று கண்டவர்கள் அவலட்சணம் என்றார்கள்; இன்றோ அலங்காரவல்லியாகக் காட்சி அளிக்கிறாள். இவ்வளவும் எதனால் ஏற்பட்டது? எப்படிக் கிடைத்தது இந்தப் 'பவிசு', எல்லாம் நான் எடுத்துக்கொண்ட முயற்சி, பட்ட பாடு, கொட்டிய பணம், காட்டிய அன்பு, அக்கறை! —என்று பட்டிக்காட்டுப் பாவையை மருமகளாகக் கொண்ட பட்டணத்து மாமியார், கூறிக்கொள்வதுண்டு. குழந்தை இங்கு எப்படி இருந்தாள், கொழு கொழுவென்று மாடி கயிறு அறுத்துக் கொண்டு ஓடுவாள், தாவிச் சென்று தடுத்து நிறுத்துவாள், களத்து மேடு சென்றால், மான் போலத் துள்ளுவாள், மரத்தில் பழங்களைக் கண்டால், கல்வீசுவாள், கொத்துக் கொத்தாகக் கீழே விழும், கண்மூடிக் கண் திறப்பதற்குள் வீட்டு வேலைகளைச் செய்து முடிப்பாள்—அப்படி இருந்த என் தங்கம், இந்தப் பாழாய்ப்போன பட்டணத்துப் பிள்ளைக்கு வாழ்க்கைப்பட்டு, காய்ந்து தேய்ந்து போய்விட்டாள். காலைக் கை ஓய்ச்சலாம், கண் பார்வையும் சரியாக இல்லையாம், மூக்குக் கண்ணாடி மாட்டிவிட்டார்கள், சாப்பாடு சரியாகச் சாப்பிடுவதில்லை, என்னமோ ஒவலாம், டானிக்காம், மருந்தாம், மாத்திரையாம், வெட்கக் கேட்டைக் கேட்காதேயடி அம்மா! கேட்காதே, பெற்ற குழந்தையை வைத்துக் கொண்டு சீராட்டக்கூட அவளுக்கு முடியவில்லை, ஆயாவிடம் விட்டுவிடுகிறாள். கண்டால் ஆத்திரம் பிய்த்துக்கொண்டு வருகிறது, என்று பட்டிக்காட்டுத் தாய், பட்டணத்துப் பிள்ளைக்கு வாழ்க்கைப்பட்ட, தன் மகளைக் குறித்துப் பேசி, ஆயாசமடைவாள்.

★

இரவு தூக்கம் கிடையாது, ஓரே இருமல்! தெருவிலே உள்ளவர்களெல்லாம் புகார் செய்வார்கள், அப்படி இருக்கும் இருமல்! எது சாப்பிட்டாலும் உடலே தங்காது! ஜீரணம் கிடையாது. இப்படி இருந்த ஆசாமிக்கு, ஆறு நாள் பஸ்பம், நாலு நாள் கஷாயம், ஒரு பதினைந்து நாள் லேகியம் கொடுத்தேன், இருமல் இருக்குமிடம் தெரியவில்லை, பொன்னிறமாகி விட்டது உடம்பு, முகத்திலே ஆரோக்கியக் களை தாண்டவமாடுகிறது, கல்லையிலே மணி பத்து அடித்தால், வயிறு 'கப கப' என்கிறதாம், கல்லைத் தின்றாலும்கூட ஜீரணமாகி விடுகிறதாம்! இவ்வளவும் எதனால், எப்படி? நம்ம, பஸ்பம், கஷாயம், மாத்திரை, லேகியம் அவ்வளவு சிலாக்கியமானவை. நாலு தலைமுறையாக எங்களிடம் இருக்கும் முறைப்படி தயாரிக்கப்பட்டவை. என் கை ராசியும், ஒரு காரணம்! இவ்வளவு நன்மை கிடைத்திருக்கிறது என்றாலும் அவனோ, ஒரு துளி நன்றி கூடக் காட்டவில்லை மருந்துச் செலவுக்ென்று ஏதோ அப்போதைக் கப்போது கொஞ்சம் பணம் கொடுத்தான். அது தவிர, சில்லறையாக, எனக்கென்று ஒரு ரூபாயும் தரவில்லை நானும், புண்ணியம் கிடைக்கட்டும், ஆசாமி பிழைத்துப் போகிறானே, காப்பாற்றுவோம் அவன் பிள்ளை குட்டிகளுக்கு வேறு யார் திக்கு என்று எண்ணித்தான வைத்தியம் செய்தேனே தவிர, இவன் என் கைக்குத் தங்கத் தோடா போடுவான், பட்டு பீதாம்பரம் வாங்கித் தருவான் என்ற நினைப்பிலே செய்யவில்லை. ஆசாமிக்கு நல்ல மனம் இல்லை. போகட்டும், வாழட்டும்—என்று நோய் தீர்த்து வைத்த நாட்டு வைத்தியர் கூறுவார், வருத்தத்துடன், நோய் போக மருந்துண்டவனோ, "தெரியாத்தனமாக, அந்தக் கட்டு மாத்திரைக்காரனிடம் நாலு நாள் இருமல் என்று சொன்னேன், அவ்வளவுதான்; எதை எதையோ கொடுத்து தடவியே வைத்து விட்டான்—இரண்டு நாளைக்கு ஒருமுறை 'ஐந்து கொடு, பத்து கொடு; அயம் வாங்க வேணும், பவழம் வாங்க வேணும்; கொத்தமல்லி வேணும், கொடி முந்திரி வேணும்,' என்று சொல்லிச் சொல்லி பணம் கேட்பான்; கொடுத்தேன்; கடைசியிலே கை கால் அறுந்தே கீழே விழுந்துவிடுவது போலாகிவிட்டது! பிறகுதான, டாக்டரிடம் கைகாட்டினேன்; உடம்பு பழையபடி—நல்லபடியாகி, மனுஷனாக உலாவுகிறேன்—செய்ததெல்லாம் போதாது என்று பணம் மேலும் வேண்டும் என்று கேட்டபடி இருக்கிறான்; எப்படி இருக்கிறது, வைத்தியனுடைய வேலை!!—என்று நொந்து சொல்லுவான்.

★

இவர்கள் பேசிக்கொள்வதிலே காரியம் நியாயம் இருக்கிறது என்று கண்டுபிடிப்பது எளிதல்ல—அதற்கல்ல இதை எடுத்துக் காட்டுவது. மனக்குறையைக் கொட்டிக் காட்டி, தங்கள் பக்கமே முழு நியாயமும் இருப்பதாகக் கூறிக் குமுறுவது, ஒரு வேடிக்கையான இயல்பு, சுபாவம், வீட்டு மருமகளைக் காட்டிப் பேசும் மாமியும், மருந்துப் பெட்டியைக் காட்டிப் பேசும் மருத்துவ

(3-ம் பக்கம் பார்க்க)

ராஜ்ய புனரமைப்பு கமிஷன்

தி. மு. க.-வுக்கு அழைப்பு

மே 13-ந் தேதி தி. மு. கழகம் கருத்துரை அளிக்கும்

இந்தியா பூராவிலும் உள்ள ராஜ்யங்களை, தக்க, புதிய வகையில் அமைப்பதற்கான கருத்தை அறிவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் கமிஷன், இதுபோது சென்னையில் தங்கி பல கட்சித் தலைவர்களின் கருத்தையும் அறிந்து வருகிறது.

அம்முறையில், இந்தப் பிரச்னை பற்றி, தி. மு. கழகத்தின் கருத்தை அறிய, கமிஷன் விரும்பி, அழைப்பு அனுப்பி இருக்கிறது.

மே 13-ந் தேதி பகல் 11-30 மணிக்கு, தி. மு. கழகக் கருத்தை எடுத்துரைக்க வருமாறு கமிஷன் அழைப்பு கிடைத்திருக்கிறது.

இந்த அழைப்பை, மேற்படி கமிஷன் அலுவலகத்திலிருந்து, செயலாளர், பொதுச் செயலாளர் அண்ணாதுரைக்கு, டெலிபோன் மூலம் விடுத்திருக்கிறார்.

பிரச்னை குறித்து நேரிலும் பேசலாம்; கருத்துரை கொண்ட அறிக்கையும் தரலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அழைப்பின்படி சென்று, இந்தப் பிரச்னை சம்பந்தமாக தி. மு. கழகக் கருத்தை எடுத்துரைக்க இசைந்து, பொதுச் செயலாளர், கமிஷன் அலுவலகத்தாருக்குத் தெரிவித்திருக்கிறார்.

வெற்றி வீரன் கூறும் சமாதான திட்டம்

வியட்நாம், கம்போடியா, லாவாஸ், ஆகிய மூன்று இடங்களையும் சுதந்திர நாடுகளாக ஒப்புக் கொண்டு, அங்கெல்லாம் தேர்தல் நடாத்தி சட்டதிட்டம் தீட்டிக்கொள்வது, என்ற சமாதானத் திட்டத்தை, வெற்றி பெற்ற ஹோ சிமின் அறிவித்திருக்கிறார்.

அடா! அடா! என்ன தாராளம்!!

★

டிராம்வே நிறுத்தப்பட்டு விட்டதால் வேலை இழந்த தொழிலாளர்கள் 1600 பேருக்குமேல் இருக்கும் இவர்களில் சர்க்கார் இதுவரையில் — 11 பேருக்கு வேறு வேலை தந்திருப்பதாக மந்திரி பரமேஸ்வரன் கூறுகிறார்.

காமராஜர் தரும் பரிசு

மக்கள் மனம் குளிர்கிறது

புது கல்வி திட்டம் ஒழிந்தது

எழுவர் கமிட்டியின் முடிவு

ஜூன் முதல் பழைய கல்வி முறை

சென்னை, மே 10—

தோழர்கள் ஆர். கிருஷ்ணசாமி நாயுடு, வி. கே. ராமசாமி முதலியார், டி. புருஷோத்தமம் எம்.எல்.சி., ஏ. சாம்பசிவம், டி. ஜி. கிருஷ்ண மூர்த்தி, எஸ். ராமசாமி நாயுடு ஆகியவர்களை உறுப்பினராகவும், நிதிமந்திரி கனம் சுப்ரமணியத்தைத் தலைவராகவும் கொண்ட, எழுவர் கமிட்டி, மே 10-ந் தேதி இரவு நிதி அமைச்சர் ஜாகையில் கூடி, புதுக் கல்வித் திட்டத்தைக் கைவிட்டுவிடுவது என்று தீர்மானித்துவிட்டது.

கமிட்டி இதற்கு முன்பு ஒருமுறை கூடியது நேயர்களுக்குத் தெரியும்

கமிட்டியில், பெருவாரியானவர்கள் புதுகல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்று தீர்மானித்தனர்,

எனவே, புதுகல்வித் திட்டம் ஒழிந்தது.

இந்த ஜூன் மாத முதல், பள்ளிக்கூடங்களில், பழைய முறைக் கல்வியே இருக்கும்—பாதி நேரம் படிப்பு, பாதி நேரம் அப்பன் தொழிலைச் செய்ய மகன் அலைவது என்ற அபாயம் இனி இல்லை.

சட்டசபைக் காங்கிரஸ் கட்சி மே 13-ல் கூடி, கமிட்டியின் முடிவு பற்றி ஆலோசிக்கும்

எழுவர் கமிட்டியின் முடிவு, காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக் கூட்டத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பொதுவாக, ஆரம்பக் கல்வி விஷயமாக, என்ன சீர்திருத்தம் செய்யலாம் என்பதைப் பற்றி கல்வி நிபுணர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், சட்டசபை உறுப்பினர் ஆகியோரைக் கலந்து பேசியும், பொது மக்களின் கருத்தைக் கேட்டு அறிந்தும், ஒரு அறிக்கை தயாரிக்க, எழுவர் கமிட்டி யோசனை கூறி இருக்கிறது.

இது பற்றி, சட்டசபை, ஒரு புது கமிட்டியை அமைக்கலாம் என்றும் எழுவர் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது.

எழுவர் கமிட்டியின் முடிவுப்படி, புது கல்வித் திட்டம் நீக்கப்பட்டு, ஜூன் முதல், பழைய முறை அமுலுக்கு வர இருக்கிறது.

கழகக் கூட்டம்

தேவகோட்டை

13—5—54 வியாழன் மாலை

இடம்: காந்தி சதுக்கம்

தலைவர்: எஸ். முத்து

பேசுவோர்:

எம். ஜி. இராமச்சந்திரன்

இராம—வெள்ளையன்

திறப்பு விழா

12—5—54 புதன் மாலை 5 மணிக்கு, 15, வேலாயுதம் லேன், (ஆர்பர் சமீபம்) மஜீத் மன்றத் திறப்பு விழா தோழர் என். வி. நடராசன் தலைமையில், தோழர் அலிசேக் மன்சூர் திறந்துவைப்பார் தோழர் மு. கருணாநிதி, மற்றும் பலர் பேசுவர்.

விரும்பினால் விவாகரத்து

வைதிகத்திற்குச் சாவுமணி!

புதுடில்லி, மே 10—

கணவனும் மனைவியும் சம்மதித்தால் மணவிலக்கு செய்து கொள்ளும் உரிமையை இருவருக்கும் அளிக்கும் 'தனித் திருமண மசோதா' இந்திய மேல் சபையில் நிறைவேறியது.

மக்கள் சபை இம்மசோதாவை நிறைவேற்றும்போது, மேல் சபையில் நிறைவேறிய மசோதாவில் சில மாற்றங்கள் செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு வேளை இரு சபைகளையும் ஒன்றாகக் கூட்டவும் நேரிடலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

இம் மசோதா மீது பேசிய சட்ட அமைச்சர் திரு. சி. சி. பிஸ்வாஸ் கூறியதாவது:—

"இம் மசோதாவினால் நன்மையை அடையப் போகும் இளைஞர்களும், யுவதிகளும் தம்மைத் தாமே கட்டுப்படுத்திக் கொள்ளும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வார்களாக! இவர்கள் முறையுடன் நடந்துகொள்வார்களேயானால் இச்சட்டத்தைக் கட்டாயமாக்குவதற்கான நாடு முழுதுமே விளர்ச்சிபெறும் அந்த நாளைக் காணவே நான் விரும்புகிறேன்."

சில்சூர், மே 10—

தன் முன் கூடிநின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர் மீது, தோட்டத்தின் மானேஜர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் 10 தொழிலாளர்கள் காயமுற்றனர்.

'மதுவிலக்கு' மந்திரிசபையை மாற்றுமாம்

பாகிஸ்தானில் — குழப்ப மயம்

பாகிஸ்தான் அரசியல் ஒரே குழப்ப மயமாகிவிட்டது. வங்காள மொழியை, ஏற்றுக் கொண்டதை எதிர்த்து, மத்திய சர்க்கார் மந்திரிகளில் ஆறுபேர் ராஜினாமா செய்வதாக மிரட்டுகிறார்கள்.

ஐபதுல்லாகான், இந்தத் தொல்லையே வேண்டாம், லண்டனுக்குச் சென்று வக்கீல் வேலை பார்க்கிறேன் என்கிறார்.

சிந்து மாகாண முதலமைச்சர் பீர்ஜாடாவை வீட்டுக்கு அனுப்பும்படி, சட்டசபை உறுப்பினரும் மூன்று மந்திரிகளும் கவர்னரை வற்புறுத்துகிறார்கள்.

மூன்று மந்திரிகளை 'டிஸ்மிஸ்' செய்யும்படி, பீர்ஜாடா, கவர்னரை வற்புறுத்துகிறார்.

வங்காளத்தில் பஸ்லுல் ஹக் பாகிஸ்தான் திட்டத்தையே எதிர்க்கிறார்.

பஸ்லுல் ஹக் மீது கடும் தண்டனை விதிக்க வேண்டும் என்று கராச்சி லீகர்கள் கர்ஜிக்கிறார்கள்.

அடுத்த வாரம், பஸ்லுல் ஹக் கராச்சி வருகிறார்; அவருடன் கலந்து பேசுகிறேன்; வழிக்குக் கொண்டு வருகிறேன் என்று பாக். பிரதமர் முகமதலி கூறுகிறார்.

எல்லைக் காந்தி, இது என்ன கண்றாவிக் காட்சி என்று கூறி ஆயாசப்படுகிறார்.

பிரகாசம் புது மந்திரி சபை அமைப்பார்

ஆந்திராவில் காங்கிரஸ் துறவறம்

பொதுத் தேர்தல் வருமோ என்ற அச்சம்

வால்டேர், மே. 10—

மதுவிலக்குப் பிரச்னை, ஆந்திராவில் மந்திரி சபையையே மாற்றி அமைக்கும் நிலைமையை உண்டாக்கி விட்டிருக்கிறது.

ஆந்திரத் தலைவர்களில் பெரும்பாலோர் மது விலக்கு ரத்து செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். ஆனால் காங்கிரஸ், அதற்கு இணங்க முடியவில்லை. எனவே, மந்திரி சபையிலிருந்து காங்கிரஸ் விலகிக் கொள்வது என்றும், பிரகாசம் புது மந்திரி சபையை அமைத்துக் கொள்வது என்றும் திருவாங்கூர் கொச்சியில் நடைபெறுவதுபோல, ஆந்திராவிலும் பிரகாசம் மந்திரி சபையைக் காங்கிரஸ் அனுமதித்துக் கொள்வதென்றும், ஏற்பாடாகி வருகிறது.

இந்த ஏற்பாடு இல்லையானால், இந்தப் பிரச்னை மீது மந்திரி சபை ராஜினாமாச் செய்துவிட்டு, சட்டசபையைக் கலைத்துவிட்டு, பொதுத் தேர்தலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்போது பொதுத் தேர்தல் நடப்பதைக் காங்கிரஸ் விரும்பவில்லை. அடுத்த மாதம், குண்டூர் ஜில்லாவில் நடைபெற இருக்கும் தேர்தலில் கலந்துகொள்ள முன்னுள் மந்திரி சந்திரமவுலியே அஞ்சுகிறாராம்.

எனவே, பொதுத் தேர்தலை தவிர்த்துவிட, ஆந்திர காங்கிரஸ், பிரகாசம் அமைக்கும் புது மந்திரி சபையை ஏற்றுக்கொள்ள முடிவு செய்கிறது.

ஆனால், காங்கிரஸ் எதிர்க் கட்சியில் உட்காருமாம்!

தூத்துக்குடி சதி வழக்கு

—(:)—

ஜாமீன் மனு தாக்கல்

சென்னை, மே 10—

தூத்துக்குடி சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, சிறையில் வாடும் தோழர்களை ஜாமீனில் விடுமாறு கோரி, சென்னை உயர்நீதி மன்றத்தில் 24—5—54-ல். மனு தாக்கல் செய்யப்பட இருக்கிறது; அதன் முடிவு 25-5-54 செவ்வாயன்று நீதி மன்றத்தில் கூறப்படலாம்.

தோழர்கள் சார்பில், பாரிஸ்டர் திரு. வி. எல். எத்திராஜ் அவர்கள், முன்னர் வாக்களித்தபடி நீதிமன்றத்தில் ஆஜராவார்கள். அவர் தற்போது நீலகிரியில் ஓய்வெடுத்துக் கொண்டுள்ளார்; ஆயினும் 25—5—'54-ல், சென்னைக்கு அவசியம் வருவதாக வாக்களித்துள்ளார் என்ற செய்தியை சென்னை வழக்கறிஞர் கே. நாராயணசாமி அவர்கள் அறிவிக்கிறார்.

தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழக செயற் குழுக் கூட்டம்

"16-5-54 ஞாயிறு காலை 10 மணிக்கு, திருப்பாதிரிப்புலியூர் தி. மு. கழகக் கட்டிடத்தில் செயற் குழுக் கூட்டம் தோழர்கள் ஈ.வெ.கி. சம்பத், என். வி. நடராசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும். எனவே, கிளைக் கழகச் செயலாளர்கள் தங்கள் ஊர் மாவட்டப் பிரதிநிதிகளை தவறாது அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

"அதற்குமுன் தமிழ் நாடு உழைப்பாளர் கட்சித் தலைவர் தோழர் எஸ்.எஸ். இராமசாமி படையாச்சி அவர்கள் காங்கிரஸ் மந்திரி சபையில் உறவு கொண்டுள்ளதைப் பற்றியும், பொதுத் தேர்தலில் தி. மு. கழக ஒப்பந்த ஏட்டில் கையெழுத்திட்டு வெற்றி யடைந்த பிறகு வாக்குறுதியையும், வாக்காளர்களையும் மதியாது பதவியேற்றுள்ளதைப்பற்றி பொதுமக்களும், தாங்களும தங்கள் ஊர் தி. மு. கழகக் கமிட்டி மூலம் தீர்மானங்களையும், வாக்களித்தவர்களின் அபிப்பிராயங்களையும் கையொப்ப மூலம் வாங்கி முறையே தலைமை நிலையத்துக்கு ஒரு பிரதியும், மாவட்ட கழகத்துக்கு ஒரு பிரதியும் 14—5—54-க்குள் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளுகிறேன்," என்று தோழர் ஆர். பாலகுருசாமி அறிவிக்கிறார்.

தோழர் வி. வி. ராமசாமி

சென்னை, மே 10—

சென்னை மேல் சபை உறுப்பினராக சென்னை சட்ட சபை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் வி. வி. இராமசாமி அவர்கள் இன்று மேல் சபைத் தலைவர் பி. வி. செரியன் முன்பு விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

நாட்டின் நாயகர்கள் ★

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

னும் கிடக்கட்டும். நாட்டை ஆளும் நாயகர்களே, இதுபோலப் பேசுகிறார்களே, அதற்கென்ன சொல்லுகிறீர்கள்!! பேசாத நாளில்லை, கூறாத தலைவரில்லை! அதிகாரம் அதிகமாக அதிகமாக, இந்தக் குறைகூறிக் கூறும் போக்கு, தங்கள் சாதனைகளைப் பற்றிக் கித்தாப்புப்பேசும் போக்கு வளருகிறது. இந்த 'வித்தை'யில் நமது நாட்டின் நாயகர்களாகியுள்ள காங்கிரஸ் தலைவர்களை மிஞ்சக்கூடியவர்கள், மேதினியில் எங்கும் இருக்க முடியாது. வானம் பொழிவதும், கடல் வரண்டு போகாதிருப்பதும், காற்று வீசுவதும் கூடத் தமது திருத்தொண்டு கண்டு களித்துத் தேவன் அருளிய வரமாகும் என்று கூசாமற் கூறுகின்றனர். கீர்த்தி கித்தாப்புக்காக எதையோ பேசிக் கொள்ளட்டும், பேசுவதால் மனமகிழ்ச்சி கிடைக்குமானால் அதை நாம் ஏன் தடுக்க வேண்டும், பேசட்டும். ஆனால் நமக்கு உள்ள வருத்தம் இவர்கள் இவ்வண்ணம் பேசுகிறார்களே என்பதல்ல! இவ்விதம் பேசி, உள்ளதை மறைக்கிறார்களே, என்பதால்தான். நல்ல காலம் வருகுது! என்று கூவிப் பிழைக்கும், குடுகுடுப்பையிடம் கோபப்படலாமா—முறையல்ல! ஆனால், அருமையான தூக்கம் கெடும்படியாகவும் குழந்தை கேட்டு அலறி அழும்படியாகவும், குடுகுடுப்பை கூவினால், கோபம் வரத்தானே செய்யும். அதுபோலவே, அடிக்கடி ஆர்ப்பரித்து, ஆளவந்தார்கள் உள்ளதை மறைக்கப் பார்க்கிறார்களோ என்பதை அறியும் போதுதான் நமக்குக் கோபமும் வருகிறது, வருத்தமும் பிறக்கிறது. இல்லையானால் பட்டணத்து மாமியும் பொட்டலம் தரும் வைத்தியனும் பேசும் முறையில் இவர்களும் ஏதோ பேசட்டும், நமக்கென்ன, என்று இருந்துவிடலாம். ஆனால், அவர்கள் பேசுவது, வெட்டிப் பேச்சு அல்ல, திட்டமிட்டுப் பேசுகிறார்கள், மக்களை ஏய்க்க; உள்ளதை மறைக்க! எனவேதான், அந்தப் போக்கைக் கண்டிக்க வேண்டி வருகிறது.

ஏழாண்டுக் காலமாகிறது, நீங்கள் ஆளவந்தார்களாகி; உங்கள் சொல் கேட்டு நடந்தோம்; விரல் காட்டும் வழி நடந்தோம்; அன்பையும், ஆதரவையும், வாழ்த்தையும், வணக்கத்தையும் கொட்டினோம்; இஷ்ட தேவதையைப் பூஜிப்பதைப்போலத் தொழுதோம்; சோடசோபசாரம் செய்தோம்; தேச பக்தரே! தேசோத்தாரகரே! தேச பந்துவே! தீனபந்துவே! ஜோதியே! சுடரே! முத்தே! மணியே! வாழ்வளிக்கும் பெம்மானே! என்றெல்லாம் அர்ச்சித்தோம்; இவ்வளவு அன்புமழை பொழிந்தோம்; உங்கள் அகமகிழ; எனினும் ஏழாண்டுக் காலமாக, மொகலாய மன்னர்கள்போல தில்லியில் தர்பார் நடத்துகிறீர்கள், ஓய்வு ஒழிச்சலின்றி, "சுயராஜ்யம் பெற்றுத்தந்த 'சுவிசேஷத்தை'க் கூறியபடி இருக்கிறீர், தியாகம் செய்தோம், கவனமிருக்கட்டும் என்று துந்துபி முழக்கம் செய்கிறீர்,—காது குடைச்சல் எடுத்தாலும், பரவாயில்லை, விடுதலைப் போர் நடாத்தியவர்களாயிற்றே என்பதற்காக கேட்டுக்கொண்டோம்; இவ்வளவுக்கும் பிறகு, வாழ்வளிக்கும் திட்டம் எங்கே, சீரளிக்கும் சட்டம் எங்கே, என்று கேட்டால், சீறுகிறீர்களே, நியாயமா? என்று மக்கள் மனம் குமுறிக் கேட்கும்போதுதான், காங்கிரஸ் தலைவர்கள், மட்டிக்காட்டு மாமிபோலப் பேசுகிறார்கள்.

கழகச் செய்திகள்

இராமலிங்கபுரம் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

29—4—54 மாலை 7-30 மணியளவில், தோழர் செ. மா. மருதமுத்து தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கோ. சிவப் பெருமாள் கொடியேற்றி வைத்துப் பேசினார்; தோழர் உ. கே. திராவிடமணி சொற்பொழிவாற்றினார்.

* * *

காலை 10 மணியளவில் நடைபெற்ற செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: செ. மா. மருதமுத்து; துணைச்செயலாளர்: வெ. க. தங்கவேலு; பொருளாளர்: சு. பழனியாண்டி; மாவட்டப் பிரதிநிதி: செ. பொன்னுசாமி; மற்றும் 16 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆறுமுகனேரியில் தி. மு. கழக பொதுக் கூட்டம்

27—4—54-ல் தோழர் வீரபாகு தலைமையில் தி. மு. கழகச் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சி. பி. சிற்றரசு ஆட்சியின் அலங்கோலத்தைப் பற்றியும், திராவிட நாடு பிரிவினையின் அவசியம்பற்றியும், மும்முனை போராட்டத்தைப் பற்றியும் விரிவுரையாற்றினார்.

கூட்டத்தில் கல்வித் திட்டத்தை ரத்து செய்யவும், அத்தக்குடி கல்லக்குடி சதி வழக்கினை வாபஸ் வாங்க சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், திருவாடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த நகரச் சந்தை வருமானத்தை இவ்வூர் நகர பஞ்சாயத்து போர்டுக்கு கொடுக்கும்படி ஆதீனத்தைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இராட்டினமங்கலத்தில் தி. மு. கழகம் துவக்கம்

27—4—54-ல், ஆரணி வட்டம் இராட்டினமங்கலம் கிராமத்தில் புதிய கிளை கழகம் சேவூர் தோழர் எம். ஏ. அப்பாக்கண்ணு தலைமையில் துவக்கி வைக்கப்பட்டது. தோழர்கள் ஆர். குட்டி, ஏ. கன்னியன், எம். அருணாசலம், டைலறன், கே. டி. குப்புசாமி ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகள், தற்கால அரசியல் நிலைமை பற்றியும் பேசினர்.

இரவு 9 மணிக்கு ஆரணி தி. மு. கழகச் செயலாளர் ஏ. கன்னியன் தலைமையில் செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: ஆர். என். வீரபத்திரன்; துணைச் செயலாளர்: ஆர். ஏ. சம்பத்; பொருளாளர்: ஆர். சி. கோவிந்தசாமி; மாவட்டப் பிரதிநிதி: ஆர். என். வீரபத்திரன்; மற்றும் 12 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புஞ்சைசத்தியூர் தி. மு. க.

25—4—54 இரவு 8 மணியளவில் செயலாளர் கே. எஸ். நாச்சிமுத்து தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, திருச்சி பொதுக்குழுத் தீர்மானங்களை அங்கீகரித்தும், கோவை மாவட்ட செயற்குழு தீர்மானங்களை ஒப்புக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோயிலடி தி. மு. கழகம்

30—4—54 இரவு 9 மணிக்கு செயலாளர் வயிராசுர் தலைமையில் நடைபெற்ற பொதுக் குழு உறுப்பினர் கூட்டத்தில், அடுத்த மாத முடிவுக்குள் ஒரு பொதுக் கூட்டம் நடத்தவும், வரவு-செலவுகள் ஒப்புக்கொள்ளப்பட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருநெல்வேலி தி. மு. க.

செயற்குழுக் கூட்டம்

25—4—54 காலை 11-30 மணியளவில் நகர செயற்குழுக் கூட்டம் தோழர் என். வீரபாகு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் திருச்சி சங்கரன், தஞ்சை அருளானந்தம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன், தோழர் சு. வீரபாகுவைக் கைது செய்ததை கண்டித்தும் வழக்கை வாபஸ் வாங்குமாறு அரசாங்கத்தைக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டவுடன், வரவு செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாதுங்கா தி. மு. கழக செயற்குழு கூட்டம்

பம்பாய், மே 4—

1—5—54 மாலை 5 மணிக்கு தோழர் தே. அ. அன்புச்செழியன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் வரவுச் செலவு கணக்குகள் ஒப்புக் கொள்ளப்பட்டு, தாயகம் செல்லும் பொருளாளர் தோழர் இ. என். என். பிச்சைபா அவர்களுக்கு தேனீர் விருந்தளிக்கப்பட்டது.

அய்யம்பாளையம் தி. மு. கழகம்

30—4—54 மாலை 3 மணிக்கு தி. மு. கழக செயற்குழு கூட்டம் பாரதி நிலையத்தில் தோழர் மொ. முத்துசாமி தலைமையில் கூடியபோது, புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது: வெ. இராசமணி செயலாளர்; இரா. காசி துணைச் செயலாளர்; பே. பரமையா பொருளாளர்; மற்றும் 13 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

தலவாக்கொல்லை தி. மு. க. 2-வது ஆண்டு விழா

இலங்கை, மே 3—

25—4—54-ல் தோழர் என். பி. வேலையா தலைமையில் மேற்படி ஆண்டு விழா நடைபெற்றது. தலைவர் தனது முன்னுரையில் தி. மு. க. வின் கொள்கையை விளக்கி சமூகம் சீர்பெற வேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்தார். தோழர்கள் வி. வேலுப் பிள்ளை, மாணிக்கம், தமிழ்ச்செல்வன் மற்றும் பலர் பேசினர்.

கடலூர் ஓ. டி. தி. மு. க.

2—5—54 மாலை 6 மணிக்கு தோழர் கி. கோவிந்தராசன் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது திரு. என். என். இராமசாமி படையாட்சி அவர்கள் வாக்காளர்களை மதிக்காமல், காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து மந்திரியாக ஆகிவிட்டதைக் கண்டித்தும், வெற்றிக்கு காரணமான திராவிட இயக்கத்தையும் அதன் தோழர்களையும் இழித்தும் பழித்தும் பேசி வருவதைக் கண்டிக்கிறது.

அம்பேத்கார் பிறந்த தின விழா

தாராவி, (பம்பாய்), மே 3—

14—4—54ல், தோழர் எம். என். ரகுநாதன் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது. 15—4—54ல் காலட்சேபம் மகாமதுரகவி வி. வே. முருகேச பாகவதருக்கு பம்பாய் தென் இந்திய சங்கீத சபா குழுவினரால் வெள்ளி தட்டு ஒன்றும், திருவாட்டி ஜி. என். ஜெகதாம்பாளுக்கு வெள்ளி டம்ளர் ஒன்றும் அன்பளிக்கப்பட்டது.

தாய்மொழிப் போர்

கிழக்கு வங்க மக்கள் வெற்றி

டாக்கா, மே 9—

“வங்க மொழியினை ஒரு ஆட்சி மொழியாக பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை ஏற்றுக் கொண்டது,”

என்று கிழக்கு வங்க முதல் அமைச்சர் பசுலுல் ஹக் தெரிவித்தார்.

ரவீந்திரநாத் தாகூரின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுகையில் மேற்கண்ட செய்தியை கிழக்கு வங்கப் பிரதமர் கூறினார்.

இந்திய சர்க்கார் தூதுவ நிலையத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு அமைச்சர்கள் வாசிக்கோலிக் கலைஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தியத் தூதுவர் திரு. பி. கே. ஆச்சாரியா அவர்களுக்கும் நன்றி கூறினார்.

தங்கள் தாய்மொழி நாட்டின் அரசியல் மொழியாகவேண்டுமென்று கிழக்கு வங்க மக்கள் பாகிஸ்தான் தோன்றிய நாள் முதற்கொண்டு போராடி வருகின்றனர். அண்மையில் கிழக்கு வங்கத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அரசாங்க மொழி பிரச்சினைப் பற்றிய செய்தி மிகவும் முக்கியமாய்க் காட்சியளித்ததும், மொழிப் பிரச்சினையின் காரணமாகவே கடந்த பொதுத் தேர்தலில் கிழக்கு வங்கத்தில் முஸ்லீம் லீக் கட்சியினர் படுதோல்வியடைந்தனர் என்பதும் பொது மக்களுக்கு நினைவிருக்கலாம்.

பாக். அ. நி. சபை முடிவு

உருதுவும், வங்காளியும் அரசாங்க மொழிகளாக இருக்க வேண்டுமென்று பாக். அ. நி. சபை தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பொழுது வங்காளி உறுப்பினர்கள் அதிகம் பேர் இருந்தனர்; பஞ்சாப் உறுப்பினர்கள் சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவில்லை.

நடவடிக்கைகளின்போது வங்காளி உறுப்பினர்கள் மிகுந்த ஆத்திரத்துடன் இருந்தனர்; முகம்மது அலியின் சமரசத் திட்டத்திலுள்ள எந்தத் திருத்தங்களையும் அவர்கள் ஏற்றுக் கொள்ள தயாராயில்லை.

உருது பத்திரிகைகளின் சண்டித்தனம்

பொது மக்களின் கிளர்ச்சியை மதித்து பாகிஸ்தான் சர்க்கார் வங்காளியையும் அதிகாரம் பெற்ற மொழி என்று அறிவித்ததால் மனம் புழுங்கிய, உருது மொழி வெறியாகளின் பத்திரிகைகளிலே கருப்புக் கோடு இட்டு துக்கம் கொண்டாடின.

பூவன்குறிச்சி

திருவள்ளுவர் கலைமன்றம்

25—4—54 மாலை 4-30 மணிக்கு திருவள்ளுவர் கலை மன்றத்தை தோழர் என். டி. வையாபுரி திறந்து வைத்தார். இரவு 7-30 மணிக்கு தோழர் பி. எ. சிவன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பி. ஆதிமூலம், எஸ். எம். சாமி, பி. காசிவேல், டி. இசக்கிமுத்து, பி. சுப்பையா, என். டி. சுப்பையா பேசினர்.

மறுமலர்ச்சி மன்றம்

ஈரோடு, மே 3—

1—5—54ல், ரயில்வே காலனிக்கு அண்மையில் மன்றம் துவக்கப்பட்டு, உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: கே. எம். வேம்புசாமி; துணைச்செயலாளர்: டி. ஆனந்தராஜ்; பொருளாளர்: எம். முரம்மது ஈசுப்; நிர்வாகக் குழு உறுப்பினர்கள்: எம். செங்கோடன், டி. ஜே. திருவேங்கடன், டி. வி. மாசிலாமணி, செல்வராசன், என். சாலமோன், ஏ. ரங்கராஜ்.

பொறுப்பற்ற மந்திரிகள்

சூடு கொடுக்க கட்சி முடிவு

பாகிஸ்தானில் ஒரு சம்பவம்

பாகிஸ்தானில், அமைச்சர்கள் ஐபருல்லகான், குர்மானி, ப்ரோஷி, நிதி மந்திரி மகமதலி, குரேஷி, பகதூர் கான், அமீர் அசாம் கான் ஆகியோர், மொழி பிரச்னை சம்பந்தமாக முடிவு செய்ய, பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை கூடியபோது வரவில்லை. இது பொறுப்பற்ற செயல்—கட்சிக் கொறடாவின் சம்மதம் பெறுமல் சட்டசபைக் கூட்டங்களுக்கு வராமலிருக்கும் கட்சி உறுப்பினர்மீது நடவடிக்கை எடுக்க, கட்சி சட்டதிட்டம், 21-வது ஷரத்து இடமளிக்கிறது. இதன்படி பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்ட இந்த மந்திரிகள்மீது ஒரு கண்டனம் கொண்டுவர, சர்தார் ஷவுகத் ஹயாத்கான் முடிவு செய்துள்ளார். முஸ்லிம் லீக் சட்டசபைக் கட்சிக் கூட்டத்திலே அவர் இந்தக் கண்டனத்தைக் கொண்டு வருவார்.

சவுந்திர பாண்டியனார் பகுத்தறிவு மன்றம்

பம்பாய், மே 3—

மன்றப் படிமனைத் திறப்பு விழாவும், “பாண்டியன் ஏடு” துவக்கவிழாவும் 29-4-54 மாலை 6 மணியளவில் தோழர் மா. இரா. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றபோது, தலைவர் படிமனையைத் திறந்து வைத்தார்; பாண்டியனார் படத்தை காஞ்சிக் இராசமணி திறந்து வைத்தார். த. மு. பொற்கோ “பாண்டியன்” ஏட்டைத் துவக்கி வைத்தார் தோழர் ம. இரா. எ. ரெத்தினசாமி பேசியபின், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

லால்குடி நடராசன் மன்றம்

அகமதாபாத், மே 5—

25—4—54ல், எலிக்கோயில் புதுச் சாலில் மன்ற உறுப்பினர் கூட்டம் தோழர் கி. சண்முகம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, எம். தெய்வசிகாமணி செயலாளராகவும், கே. ரங்கா பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மன்ற வளர்ச்சியைப் பற்றி, தோழர்கள் இரா. வைத்திலிங்கம், பொ. இரத்தினவேல், சு. நரசிம்மன், க. பெருமாள், ஆர். டி. சலம் சொற்பொழிவாற்றினார்.

இளங்கோ மன்றம்

மதுரை, மே 5—

23—4—54 ஞாயிறு மாலை 4 மணியளவில் மன்றக் கட்டிடத்தில் தோழர் ஆர். கே. காளை தலைமையில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டபின் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—மு. சந்தானம், செயலாளர்; அ. குருசாமி துணைச் செயலாளர்; மு. விவேகானந்தன் — நிதிக்காப்பாளர்; ஆர். கே. காளை, கே. எஸ். மணி—நகர்கிளைப் பிரதிநிதிகள்; செயற்குழு உறுப்பினர்கள்:—ஆர். கே. காளை, கே. எஸ். மணி, சிவாஜி ரெத்தினம், வ. முத்து, அ. பாண்டி, அபிராம், ஏ. கே. கோபால்; கே. எஸ். மணி—மாவட்டப் பிரதிநிதி.

உபசாரம்

29—4—54 மாலை ஆச்சாரியார் கல்வித்திட்ட எதிர்ப்புப் படை செக்லிக்குப்பம் வந்தபோது, அப்படையைச் சேர்ந்தவர்கட்கு தி. மு. கழகக் கட்டிடத்தில், கழகச் சார்பில் குளிர்பானங்கள் அளிக்கப்பட்டது.

தோழர்கட்கு!

‘நம் நாடு’ அலுவலகத்திற்குப் பணம் அனுப்பும் தோழர்கள், மணியார்டர் கூப்பனிலும், கடிதங்களிலும் தங்களால் அனுப்பப்படும் பணம் எதற்காக அனுப்பப்படுகிறது என்பதைத் தயவு செய்து எழுதியனுப்பவும்.

விவரமே எழுதப்படாமல், பணத்தை மட்டும் அனுப்பிவிடுவதால், அதை எந்தக் கணக்கில் வைத்துக்கொண்டு ஆவன செய்வது என்பதை உடனடியாகத் தெரிந்து கொள்ளவியலாமல், வீணான காலதாமதம் இரு சாராருக்கும் ஏற்படுகிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
‘நம் நாடு’

படிப்பக திறப்பு விழா

1—5—54 8-30 மணிக்கு சோழவந்தான் டாக்டர் வட்டரத்தரால் ‘பன்னீர் செல்வம்’ நினைவுப் படிப்பகம், தோழர் என். செல்லத்துரையால் திறந்து வைக்கப்பட்டது. படிப்பகத்திற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: வீ. செங்குட்டுவன்; துணைச் செயலாளர்: பெ. மணிவேல்; பொருளாளர்: க. சோமு; விளம்பர உறுப்பினர்கள்: சு. இராசு, பி. ஆறுமுகம்; செயற்குழு உறுப்பினர்கள்:—அ. பரமசிவம், கி. சங்கரன், பெ. நடராசன், சு. சுப்பிரமணியன், சி. நடராசன், ம. இராசு, அ. நீலமேகம், க. திராவிடன்.

அன்று நகரில் பல இடங்களில் இயக்கக் கொடிகள் ஏற்றப்பட்டன.

விளாத்தை மலையமான் படிப்பக திறப்பு விழா

3—5—54 காலை 9 மணிக்கு விளாத்தை கடை வீதியில் திரு. அண்ணாமலை கட்டிடத்தில் திரு. த. வீராசாமி தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது.

பள்ளி ஆண்டு விழா

27—4—54ல், அரச்சலூர் கிராமம் புதுவலசு போர்டு ஆரம்பப் பள்ளி 6-வது ஆண்டு விழா திரு. கே. ஆர். நல்லசிவம் தலைமையில் நடைபெற்றது. தோழர் கே. சாமியப்ப கவுண்டர் கொடி ஏற்றினார். பாரதியார், கட்டபொம்மன், சிவாஜி ஆகியோரின் படங்களை தோழர்கள் சாமியப்பன், சம்பத்தம் ஆகியோர்கள் திறந்து வைத்தனர் தோழியர் வி. ராஜலட்சுமி பெண்கள் முன்னேற்றம் பற்றியும், வி. வெங்கடேசன் ‘புதுமுறைக் கல்வி’ என்பது பற்றியும் பேசினர்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆர். முத்துக்குமாரன் பரிசுகளை வழங்கினார். இரவு ‘கடமை வீரன்’ ‘கட்டபொம்மன்’ நாடகங்களும் மாணவ-மாணவிகளால் நடனம், ஒயில் கும்மி கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

இலவச க்ஷவரம்

குடந்தை ரெயின்போ ஹேர் கட்டிங் சலூனில் மே தினத்தை முன்னிட்டு, 1—5—54 காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை ஏழைத் தொழிலாளிகளுக்கு இலவச க்ஷவரம் செய்யப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.